பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 தை 14 ஸபர் 17 இதழ் 348
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 27-1-78




## இறப்பிலும் ஒன்றாக இணைந்த நண்பர்கள்

(யாழ்ப்பாணம்)

காலையில் சந்திப்போம் என்று கூறிப் பிரிந்த நண்பர்கள் இருவர் அடுத்தநாட் காலையில் ஒன்றாகவே இறப்பில் சந்தித்துக்கொண்டனர்.

இந்த அபூர்வ சம்பவம் முத்திரைச் சந்திப் பகுதியில் நடந்துள்ளது.

திடீரெனச் சுகவீனமுற்ற தமது நண்பரான சுந்தரநாதன் (வயது 85) என்பவரைப் பார்க்கவந்த இரத்தின துரை (வயது 62) என்பவர் "என்ன போகப்போறியோ ஒன்றுக்கும் யோசி யாதை நானும் 16-ம்பக்கம் பார்க்க

# மந்திரிகளின் பொறுப்புக்கள் பகிர்ந்து அளிக்கப்படலாம்

## அமைச்சரவையில் உடனடிமாற்றம் இருக்காது

[கொழும்பு]

இப்போதைய அமைச்சரவையில் உடனடியாக மாற்றம் எதுவும் செய்யாவிட்டாலும், அமைச்சுக்களின் பொறுப்புகள் பகிர்ந்து அளிக்கப்படலாம் என்று தெரிய வருகின்றது.

பிரதம மந்திரி திரு ஜே ஆர். ஜயவர்த்தன ஜனதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டதின் பின் இப்போதைய மந்திரிசபையில் மாற்றங்கள் ஏற்படுத்தப் படலாம் என்றும் பழைய முகங்கள் நீக்கப்பட்டு புதிய முகங்கள் சேர்க்கப்படலாம் என்றும் முன்பு கருதப்பட்டது.

இப்போது உள்ள 22 மந்திரிகளே மீண்டும் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்வார்கள் என்று இப்போது தெரிய வருகின்றது.

ஆனல் அமைச்சர்களின் பொறுப்புக்கள் பகிர்ந்து கொள்ளப்படும் என்றும் தெரி [6ம் பக்கம் பார்க்க]

## ஜனதிபதி பதவிஏற்பு: ஜே. ஆரின் படங்கள் இலவச விநியோகம்

[யாழ்ப்பாணம்]

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனதிபதியாகப் பதவியேறகும் வைபவத்தையொட்டி, வடபகுதியில் விழாக்கள் நடத்துவதற்கு விழாக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதேச ஐக்கிய தேசியக்கட்சிக் காரியாலயத்தில் நடந்த கூட்டத்தில், தெரிவுசெய்யப்பட்ட இக்குழுவின் தலைவராக சட்டத்தரணி சதா நடராசாவும், செயலாளராக திரு. ம. அமிர்தலிங்கமும் 15 பேர் கொண்ட கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

இவ்வைபவத்தையொட்டி அரசாங்க காரியாலயம், கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் பெப்ரவரி 4-ம் திகதி திரைநீக்கம் செய்து வைக்க பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் படங்களை இலவசமாக வழங்குவதென இக்குழு முடிவுசெய்துள்ளது.

நல்லூர் கந்தசாமிகோவில், வண்ணை வேங்கடேசப்பெருமாள் கோவில் ஆகியவற்றில் பெப்ரவரி 4-ம் திகதி நடைபெறவிருக்கும் விசேட வழிபாட்டில் அரசாங்க அதிபர் திரு. விஜயபால, பொலிஸ் அதிபர் திரு. ரணமுத்துவல, ஆணையாளர் திரு. கே. சிவ

(-6ம் பக்கம் பார்க்க)

## கல்வி அமைச்சர் இன்று ரயிலில் வருகிறர்

[யாழ்ப்பாணம்]

கல்வி அமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தின ஏற்கனவே திட்டமிட்டபடி 3 நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று காலை விசேட ரயிலில் யாழ். புகையிரத நிலையத்தை வந்தடையும்போது அவருக்கு அங்கு வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

யாழப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கல்வித் திணைக்களத்தினல் இன்றும் நாளையும் நடாத்தப்படும் யாழ். மாவட்ட பாடசாலைகளின் "கலை விழா"வில் கல்வி அமைச்சர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்ப்பாணம் நகரவிகாரை நல்லூர் கந்தசாமி கோவில், யோகசுவாமி ஆச்சிரமத்திற்கும் கல்வி அமைச்சர் சென்று வழிபாடு செய்வார்.

பெற்றூர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் தூதுகோஷ்டி, வடமாகாண அதிபர்கள் சங்க தூதுகோஷ்டி மற்றும் தமிழ் சிங்கள நட்புறவுச் சங்கத்தினர் தமிழ் பௌத்த சங்கத்தினரும் அகில இலங்கை முன்னேற்றத் தமிழர் அபிவிருத்திச் சங்கத்தினரும் அமைச்சரைச் சந்திக்கவிருக்கின்றனர்.

ஐக்கியதேசியக்கட்சி யாழ் பிரதேச கமிட்டி செயலாளர் திரு. ம. அமிர்தலிங்கம் தலைமையில் வடபகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்கள் நாளைக்காலை அமைச்சரை சந்திக்கவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் நாளை மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கும் கவிஞர் இக்பால் நினைவுதினக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்தின கலந்துகொண்டு உரைநிகழ்த்துவார். இவ்விழாவில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களும் கலந்துகொள்வார்கள். [க]

## யாழ். நகரில் இன்று புதிய கடை திறப்பு விழா

(27-1-1978)



உங்களுக்குத் தேவையான பலசரக்கு மற்றும் சாய்ப்புச்சாமான்களை சிரமமின்றி மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்வதற்கு இதோ ஓர் புதிய ஸ்தாபனம்

**விநயகர் ஸ்ரோர்ஸ்.**

20-1-78ல் நடைபெறவிருந்த மேற்படி ஸ்தாபனத்தின் திறப்புவிழா தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு இன்று (27-1-78) காலை 10-44 மணி முதல் 11-00 மணி வரையுள்ள சுபவேளையில் திறக்கப்படும் என்பதை அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேம்.

தங்கள் நல்வரவையும், நல்லாசியையும் நாடும்

**விநயகர் ஸ்ரோர்ஸ்**

(சங்கரப்பிள்ளை கட்டிடம்)

166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7787 8250

## அந்தியேட்டிக் கிரிகை

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 - 11 - 1922 |  | 31 - 12 - 1977 |

அமரர் பெரியதம்பி பொன்னையா

கீழ்சரவை வாசரும், கிழவிதோட்ட விநாயகர் ஆலய முகாமை உறுப்பினரும், கலை மேதைகளை வரவேற்று ஆதரித்தவரும், மாமேதை பொன். கந்தையா வழி வந்த சம்பூவிஸவாதியும், சமூக சேவையாளரும், செல்வந்தருமாகிய

**பொன்இல்லம் பொன்னையா**

அவர்களின்

அந்தியேட்டிக் கிரிகை (29-01-78) ஞாயிறு காலை 9-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்;

ஈமக் கிரிகைகளில் கலந்துகொண்டோர்க்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்க்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

8332 திருமதி பொன்னையாவும், மகளும்.

## நீரிறைக்கும் இயந்திரம் திருட்டு: ஒருவர் குற்றவாளி; தீர்ப்பு ஒத்திவைப்பு

(பண்டத்தரிப்பு)
நீர் இறைக்கும் இயந்திரமொன்றை களவாடியதாக சுன்னாகம் பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நீதவான் எம். டி. ஜேசுரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரியைக்குற்றவாளியாகக் கண்ட நீதவான் தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 30 திகதிக்கு ஒத்திவைத்து அதுவரை எதிரியை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் என்பவரின் இரண்டாயிரத்து இருநூறுரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரத்தை இரவு வேளையில் களவெடுத்துச் சென்றதாக மூளாயைச் சேர்ந்த கணபதி வைத்திலிங்கம் தொல்புரத்தைச் சேர்ந்த சின்னத்துரை தர்மலிங்கம் ஆகிய இரு நபர்களை சுன்னாகப் பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். வழக்கு விசாரணையின் போது எதிரிகளில் ஒருவரான கணபதி வைத்திலிங்கம்

[5-ம் பக்கம் பார்க்க]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதி மன்றத்தில்
வழ. இல: ஈடு/14610

அ. சுப்பிரமணியம் கைம்பெண் செல்லம்மா, அரியாலை யாழ்ப்பாணம் — வழக்காளி
எதிராக
1. வல்லிபுரம் துரைராஜா
2. பெண் தங்கலட்சுமியும் இருவரும் அரியாலை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கிலக்கம் ஈடு 14610-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு மாசிமாதம் 23-ந் திகதி (23-02-78) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 2490-ம் மேலும் ரூபா 1500/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வித வட்டியும் வழக்கு அணைத்த திகதியாகிய 1974-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 4-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975-ம் ஆண்டு பங்குனிமாதம் 27-ந் திகதி வரையுமான வட்டியும் அதன் பின்னர் தீர்வைத் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபாய் 458 சதம் 95 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 291 சதம் 95 நடைபெறவேண்டிய செலவு ரூபா 91/50 மேலதிக சமயாசமயச் செலவு ரூபாய் 75/50 கொடுக்க வேண்டியிருப்பதாலும் இதில் கொடுபட்ட தொகை ரூபா 300 கழிவாகவும் விற்பனை ஆணையாளரின் முன்னைய செலவுப் பணம் ரூபாய் 106/- இவ்விற்பனையில் அறவாக்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை "துவாங்கணப்புலம்" பர. நில. இலா. 2 செய்பயிர் வான் பயிர்களும் இரண்டு பரப்புக்கும் எல்லை கிழக்கு கந்தையா பெண் செல்லம்மாவினுதனம், வடக்கு செல்லையா கோபாலசிங்கம் மகேஸ்வரியின் காணிமேற்கு ரோட்டு, தெற்கு வல்லிபுரம் பெண் தெய்வானைக்கும் பங்காளருக்குமுரியகாணி இதடங்கலும் D 261/72.

ஏ. ம. பிறின்ஸ் எதிர்மன்னசிங்கம்,
வெற்றீஸ் கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்.

107, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்,
திகதி 9-12-77.

833


த பினான்ஸ் கம்பனி லிமிட், யாழ்ப்பாணம்

### பதவி வெற்றிடம்

எமது காரியாலயத்தில் பணியாற்றுவதற்கு எழுதுவினைஞர் பதவிக்கு வெற்றிடமுண்டு. விண்ணப்பதாரர், கணக்கியல் துறையிலும் வாடகைக் கொள்வனவு துறையிலும் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும். தமது தகுதி மற்றும் பிறசான்றிதழ்களுடன் 1978, மாசி 10-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

த பினான்ஸ் கம்பனி லிமிட்
191, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.



## திருமண அழைப்பு

மணமகன்: ந. பாலகணேசன்
(தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்)
மணமகள்: இ. பத்மதேவி
(ஆசிரியை, தங்கந்தை)
இடம்: மணமகன் இல்லம் (வவுனவத்தை. தெல்லிப்பழை)
காலம்: 29-01-78 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: இரவு 11-06 மணி முதல்
1-08 மணிவரையுள்ள சுபநேரம்

உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்
மணமகன் இல்லத்தில் 30-01-78 திங்கள் பிற்பகல் 4-8 மணிவரை
மணமகள் இல்லத்தில் 31-01-78 செவ்வாய் பிற்பகல் 4-8 மணிவரை

அன்புடன்
திருமதி. மீ நடராசாவும் மக்களும்—மருமக்களும் மகாதனை, தெல்லிப்பழை.
திரு. இ. இராசாவும் பாரியாரும் வவுனவத்தை, தெல்லிப்பழை.

8330


நுகேகொடை கொலை வழக்கு

## 5 இளைஞர்களுக்கு தூக்கு! இரு பெண்கள் விடுதலை

[கொழும்பு]
நுகேகொடை கொலை வழக்கில் எதிரிகளான 5 இளைஞர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில், நுகேகொடையை சேர்ந்த ஐம்புகஸ்முல்லையில், 77 மார்ச் 8-ம் திகதி சட்ட விரோதமாக கூட்டம் கூடி, உல்லாசப் பிரயாணியின் கார் சாரதியான எம் டி எஸ் கருணநாயக்காவை கொலை செய்ததாக ஏ பி ஏ சிறிசேன, எச் பி ஆரியசேன, ஏச் ஜி ஆரியவதி, எச் சிலிநோனா, கே வில்பிரட் பெரேரா, எம் சிறிசேன பெரேரா, என் பி ய தாசா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சாட்சியம் திருப்திகரமில்லாததால், 3-ம் எதிரியான ஏச் ஜி ஆரியசதியும், 4-ம் எதிரியான ஏச். சிலிநோனாவும் விடுதலை செய்யப்பட்டனர்.

சிங்களம் பேசும் ஜூரசபை முன் நடந்த இவ்விசாரணையில் 5 இளைஞர்களும், கொலை குற்றவாளிகள் என ஜூரி சபையினர் ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர்.

## வீடுடைத்து ரூ. 24,000 பொருட்கள் திருட்டு

[கொழும்பு]
வீட்டில் எவரும் இல்லாத வேளை வீட்டையுடைத்து உட்புகுந்ததிருடர்கள் 24,236 ரூபா பெறுமதிமிக்க பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

முகத்துவாரத்தைச் சேர்ந்த இராமலிங்கம் பொன்னம்பலம் என்பவரது வீட்டிலேயே இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

முகத்துவாரம் பொலிசார் இம் மர்மத்திருட்டுத் தொடர்பாக புலன்விசாரணை மேற்கொண்டுள்ளனர். [உ]

கண்டக்டரிடம் கைவரிசை:

## இரு இளைஞர்கள் பொலிஸில் ஒப்படைப்பு

[மாங்குளம்]
மாங்குளம் பொலிஸ் பகுதியில் உள்ள குமுத்தல் என்னும் இடத்தில் இ. போ. ச. பஸ் ஒன்றை நிறுத்தி இரு இளைஞர்கள் கண்டக்டரைத் துப்பாக்கி முனையில் மிரட்டி பணத்தைக் கொள்ளையடித்ததாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரு இளைஞர்களையும் பொதுமக்கள் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

தொண்டமனாறு கொலை முயற்சி வழக்கு

## விசாரணை நடுவில் நான்கு எதிரிகளும் விடுதலை

(யாழ்ப்பாணம்)
தொண்டமனாறு கொலை முயற்சி வழக்கில் நான்கு எதிரிகளும், விசாரணை நடுவில் விடுதலைசெய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ்.மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் தொண்டமனாறில், 74 நவம்பர் 27ல் ஐ. வல்லிபுரம், வல்லிபுரம் தங்கரத்தினம், வல்லிபுரம் புஸ்பமாலா, வல்லிபுரம் விவேகானந்தன் ஆகியோர் நாகர் பாலசிங்கத்தை கொலைசெய்ய முயற்சித்ததாகவும், அதே நேரத்தில் அதே இடத்தில், தம்பிநாதர் செல்லாச்சிக்கு காயம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். நவரத்தினம், சட்டத்தரணி சாகி விஸ்வநாதன், சட்டத்தரணி எம். ஏ. ஜேசுநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். ஐ. கனகரத்தினம் ஆஜரானர்.

விசாரணை நடுவில், ஜூரி சபையினர், வழக்கைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லையென தெரிவித்ததை தொடர்ந்து, எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். [ஏ]


யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

### கேள்வி விண்ணப்பம்- கிறே பப்ளின்

எமது மின்தறி ஆலையின் உற்பத்திப் பொருளாகிய கிறே பப்ளின் கேள்விப்பத்திரத்தின் மூலம் விற்பனைக்கு இருக்கின்றது.

முடிவுத் திகதி:- 04-2-78.

மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்
74/3,
அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1978, ஜனவரி, 25. 8328



யாழ்ப்பாணம் மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம். (வரையுள்ளது)

### உலொறி 'பொடி' அடித்தலுக்கான கேள்வி விண்ணப்பம்

24 ஸ்ரீ 5521 மெகிடிஸ் பென்ஸ் 312 உலொறியின் பழைய பொடியை நீக்க, புதிய பொடி அடித்தலுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் அரக்கு முத்திரையிட்ட பதிவுத்தபால் மூலம் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 04-2-78.

மேலதிக விபரங்கள்தேவைப்படின் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.
74/3, அல்விரட் துரையப்பா வீதி.
யாழ்ப்பாணம்.
8327 1978 ஜனவரி 25.



## வரி விளம்பரம்

### பயிற்சி

3 மாத விசேட A. M. I. M. I. (London) பரீட்சைக்கு சமனான மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-02-1978-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு, அதிபர் இன்ஸ்ரிரியூட் ஒப் எஞ்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 8307

### விற்பனைக்கு

E N 8000 தொடர்பிலக்க வோக்ஸ்வகன் கார் (VOLKS-WAGON) நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, மானிப்பாய். 8817

திறமைச் சித்தி நிச்சயம் ஜி. சி. ஈ. உயர்தரம் அண்மைக்கால பரீட்சை வினாக்களும் விடைகளும் பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், தூய கணிதம், பிரயோககணிதம் ஒவ்வொன்றும் ரூபா 19/40 தபாற் செலவு ரூபா 1/- யூனைட்டெட் இன்ஸ்ரியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 8326

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு முன்னால் வீடு கட்டுவதற்கு உகந்த காணி உண்டு. தேவையானோர் நேரில் சந்திக்கவும், தொடர்பு: செ. சோமசுந்தரம், ஸ்ரேசன் வீதி, தெல்லிப்பளை. 8336

பருத்தித்துறையில், காலேஜ் ரோட்டிலிருந்து பிரிந்துபோகும் தம்பசட்டி லேனில் குளியலறைகளுடன் இணைந்த படுக்கை அறைகள் கொண்ட சகல வசதிகளுமடங்கிய வீடு விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு திருமதி ப சிவரட்ணம், மாடி வீடு, நீதிமன்ற வீதி, மல்லாகம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்க. 8285

### தேவை

தையல் தைப்பதில் அனுபவமும் தேர்ச்சியும் உள்ள பெண்களுடன் தேவைநேரில் தொடர்பு கொள்ளவும். கிளியோ(F)பான் இண்டஸ்டிறிஸ் 119/1/1 K. K. S. ரோட். யாழ்ப்பாணம், (மைலன்ஸ் மாடி) 8323


## இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]
கொக்குவில்கிராமசபை மின்சார அத்தியட்சகராக கடமையாற்றிய திரு. ரி. ஆனந்தராசா பருத்தித்துறை நகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

[சங்கானை]
தொல்புரம் விவசாய விஸ்தரிப்பு நிலையத்தில் கடந்த மூன்றுவருடகாலமாகக் கடமையாற்றிய திருமதி புஸ்பலட்சுமி சுப்பிரமணியம் யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு நிலைய அலுவலகத்திற்கும் உடுவில் விவசாய சேவை நிலையத்தில் கடமையாற்றிய திருமதி அருளானந்தம் தொல்புரம் விவசாய சேவை நிலையத்திற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர். [உ]


சன்சயின் அரைபார்சோப்
இன்றே கேட்டுவாங்குங்கள்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

ஈழநாடு
The Eelanaadu

## உணவில் கலப்படம்!

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்பவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கக்கூடிய முறையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவிருக்கிறது.

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வது சமீப காலத்தில் மிகவும் அதிகரித்திருக்கிறது.

சில தினங்களுக்கு முன்னர் மலைநாட்டுப் பகுதியில் பருவமடைந்த பதின்மூன்று இளம்பெண்கள் நல்லெண்ணெய் உட்கொண்டதால் நோய்வாய்ப்பட்டனர் இப்பெண்கள் ஊனமடைந்துள்ளனர்.

நல்லெண்ணெயில் புரதச்சத்து நிறைய இருக்கிறது. பெண்கள் பருவமடைந்ததும் அவர்களுக்கு நல்லெண்ணெய் கொடுப்பது தமிழ்க் குடும்பங்களில் பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றிவரும் மரபு.

அந்தப் பதின்மூன்று பெண் பிள்ளைகளுக்கும் நல்லெண்ணெய் என்று வாங்கிய எண்ணெயே கொடுக்கப்பட்டது.

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்பவர்களை மன்னிக்கவே முடியாது.

கோப்பித்தூள், மிளகாய்த்தூள் முதல் சகல உணவுப் பொருள்களிலும் இப்போது கலப்படம் அதிகரித்துள்ளது.

பதுக்கல், கொள்ளை இலாபத்தைவிடக் கலப்படம் மிக மோசமான குற்றமாகக் கருதப்படல் வேண்டும்.

இப்போதுள்ள சட்டவிதிகளின்படி கலப்படம் செய்பவர்கள் சிறிய தொகையை அபராதமாகச் செலுத்தித் தப்பித்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.

இப்போது கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ள புதிய சட்டவிதிகளின்படி கலப்படம் செய்வோருக்குப் பெருந்தொகைப் பணம் அபராதம் விதிப்பதுடன் சிறைத்தண்டனை விதிக்கவும் அதிகாரமிருக்குமாம்.

கலப்படக்காரர்களுக்கு அபராதமும் சிறைத்தண்டனையும் விதித்தால் மட்டும் போதாது.

உணவில் கலப்படம் செய்பவர்களுக்கு மக்கள் மத்தியில் கசையடி கொடுப்பதற்கும் சட்டத்தில் ஏற்பாடு இருக்கக் கூடியதாகத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

இதுமட்டுமல்லாது பதின்மூன்று பெண்பிள்ளைகளும் ஊனமடைந்தது போன்று உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யப்படுவதினால் பாதிக்கப்படுபவர்களுக்கு அப்பொருள்களைத் தயாரித்தவர்களும் விற்பனையாளர்களும் நஷ்டஈடு செலுத்தக்கூடியதாகவும் சட்டத்தில் திருத்தம் செய்வதும் கலப்படத்தை ஒழிப்பதற்கு உதவுமென்று நம்பலாம்.

## ஆத்மஜோதி முத்தையா இந்தோனேஷியா செல்கிறார்

[யாழ்ப்பாணம்]

இந்தோனேஷியாவிலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தினரின் விசேஷ அழைப்பை ஏற்று 'ஆத்மஜோதி' ஆசிரியர் திரு. நா. முத்தையா இன்று வெள்ளிக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து அங்கு பயணமாவார்.

இவருக்கு நல்வாழ்த்துக்கூறி வழியனுப்ப பல்வேறு சமய சங்கங்களும் கூட்டாக ஏற்பாடு செய்துள்ளன.

இந்தோனேஷியா செல்லும் வழியில் திரு. நா. முத்தையா சிங்கப்பூர், மலேஷியா ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்வார். அண்மையில் திரு. நா. முத்தையாவினால் எழுதி வெளியிடப்பெற்ற 'திருமுறைச் செல்வம்' 'பன்னிருமாத நினைவுகள்' என்ற நூல்களின் வெளியீட்டு விழாவும் மலேசியாவில் நடைபெற இருக்கின்றன.

மலேஷிய இந்து சங்கம் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது. [உ]

## பாடசாலை கலைவிழா இ.தே. ஆ. சங்கம் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்ட பாடசாலைகளின் கலைவிழா', என்ற பெயரில் யாழ். மாவட்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் இம்மாதம் 27 ம், 28 ம் தேதிகளில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டும், அந்நிகழ்ச்சிகளில் கல்வியமைச்சர் பங்குபற்றுவதாகக் கூறி, பிரவேசச் சீட்டுக்கள் விற்கப்படுவதையும் இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட சபை ஆட்சேபித்திருப்பதுடன் அப்பிரவேசச்சீட்டுகளை ஆசிரியர்கள் வாங்கத் தேவையில்லையென்றும் அங்கத்தவர்கட்கு அறிவித்துள்ளது:

இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் பத்தாயிரத்திற்குமதிகமான ஆசிரியர்கட்கு அநீதியான இடமாற்றமளித்தமை, ஆசிரியர்களையும் கல்விமான்களையும் கலந்தாலோசியாது கல்வித்திட்டத்தையும், பரீட்சை முறைகளையும் மாற்றியமைத்தமை ஆகியவை ஆசிரிய சமூகத்திற்கு இழைத்த பெரும் அநீதிகளாகும். எனவே கல்வியமைச்சர் பங்குபற்றவுள்ளதாகக் கூறப்படும் கலைவிழாக்களில் ஆசிரியர்கள் கலந்துகொள்ளாதிருப்பதே சிறந்ததென மேற்படி சங்கம் அறிவித்துள்ளது.

## கல்வி மந்திரியிடம் மகஜர் கையளிப்பர்

[யாழ்ப்பாணம்]

இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்தினவிடம் அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளையினர் மகஜர் ஒன்றினைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

மேற்படி மகஜரில் பின்வரும் கோரிக்கைகள் அடங்கியுள்ளன என்று கிளைச் செயலாளர் திரு. கே. நவரத்தினம் தெரிவித்தார்.

பாடசாலைகளில் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ள சிற்றூழியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமைமட்டுமல்ல, பாடசாலை ஊழியர்களை கல்வித் திணைக்களத்தில் சேவைக்கு அழைத்தமையும்.

கனிஷ்ட ஊழியர்களுக்கு காலந்தாழ்த்தி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்ட சீருடைத் துணி விநியோகம் சம்பந்தமாக யாழ். கல்வித்திணைக்கள அதிகாரிகள் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு அறிவிக்காமல் கேள்விப்பட்டு துணிக்கு வருபவர்களுக்கு விநியோகம் செய்தமை. இவர்களுக்கு தையல் கூலி உரிய காலத்தில் கொடுக்கத் தவறியமை.

கல்வித் திணைக்களத்தில் சேவையாற்றுவதற்கு காடர் இல்லாத பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்து மறுபடியும் கல்வித் திணைக்களத்தில் சேவைக்கு அழைத்தது.

அதிபர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு இடமாற்றம் செய்வதால் தொழிலாளர், காவலாளர்கள் பாதிக்கப்பட்டமை.

கடன் வழங்கு சபைக்கு கடன் கோரி இரண்டு வருடங்கட்கு முன்பு விண்ணப்பித்தவர்களுக்கு இதுவரை கடன் கொடுக்காத காரணம்.

இளைப்பாறிய ஊழியர்கள் பென்சனுக்கு விண்ணப்பித்தும் இரண்டு வருடங்கள் ஆகியும் யாழ். கல்வித் திணைக்களம் ஏதும் நடவடிக்கை எடுக்காமை. [உ]

## யாழ்ப்பாணத்தில் நாடகக்கல்லூரி உதயம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நாடகக் கல்லூரி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இம்மன்றம் அமைக்கப்பட்டதன் நோக்கம் குறித்து கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை விளக்கிக் கூறினார்.

பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட கலையரசு சொர்ணலிங்கம் 'நாடகக் கலைக்கும் பயிற்சி அவசியம்' என்றார்.

கவிஞர் வி.கந்தவனம், திரு. சொக்கன், திரு. திருச்செல்வம் திரு கல்யாணசுந்தரேசன், எம். சண்முகலிங்கம் முதலானோரும் பேசினர். மேற்படி மன்ற அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. [உ]

## மணிவாக்கு

நாம் என்ன நினைக்கிறோம் என்ன செய்கிறோம் என்பதே முக்கியம். மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்ன சொல்கிறார்கள் என்பதல்ல. —எமர்ஸன்

## விதைவெங்காயம் விநியோகம்

[சங்கானை]

நாட்டில் நிலவும் விதை வெங்காயத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் மூலமாக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்படும் வெங்காயத்தின் வலிமேற்குப் பகுதிக்கான கோட்டாவை சங்கானை ப.நோ.கூ. சங்கம் கொள்வனவு செய்து தொல்புரம் விவசாய சேவை நிலையத்தில் வைத்து இப்பகுதி விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுக்கும். இதற்கான ஒழுங்குகளை மாவட்ட விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் திரு. நா. சிவமுத்துலிங்கம் மேற்கொண்டுள்ளார். [இ]

## மீனவர்க்குப் புதிய வள்ளங்கள்

[உடுப்பிட்டி]

பருத்தித்துறைக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 1,190,950 ரூபா பெறுமதியான 16 புதிய வள்ளங்களைக் கடந்த வருடம் தனது அங்கத்தவர்களுக்கு வழங்கியுள்ளது.

இக்கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மீன்பிடி உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், கட்டுமரங்கள் போன்றவற்றையும் மீனவர்களுக்கு வழங்கி வருகின்றது. [உ]

## ஆசிரியருக்குக் கடிதம்:

## இந்தப் பிரயாணிகள் சஞ்சலம் தீருமா?

சுன்னாகம், தெல்லிப்பளை, மாவிட்டபுரம் ஊடாக நடைபெறும் 769 பாதை இலக்க இ. போ. ச. பஸ் சேவை படுமோசமான நிலையில் உள்ளது.

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை பஸ்சேவை மிக மோசமாக இருந்ததால் பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகள் பொதுமக்கள், நோயாளர், அரசாங்க ஊழியர்கள் அடைந்த சிரமம் சொல்லுந்தரமன்று. உரும்பராய் ஊடாக நடைபெறும் 764 பாதைஇலக்க பஸ்சேவை எவ்வளவு சீராக நடைபெறுகிறது என்பதனை யாழ். பஸ் நிலையத்தில் 769 பாதை கியூவில் தாங்கி வழிந்து, கால் கடுக்க மணிக்கணக்கில் நிற்கையிலேயே அறிந்துகொள்ளமுடிகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாகம், தெல்லிப்பளை வரை செல்ல வேறு பாதை இலக்க பஸ்கள் உண்டு. தெல்லிப்பளைக்கு அப்பால் செல்வோர்தான் சஞ்சலமடைய வேண்டியுள்ளது.

பஸ்கள் குறைவாக இருக்கலாம், அவற்றில் சில பழுதுபட்டுமிருக்கலாம்.

ஆனால் குறிப்பிட்ட சில பாதைகளுக்கு மட்டும் அதிக பஸ்களை சேவையிலீடுபடுத்தி அதிகாரிகள் ஏன் மற்றப் பிரயாணிகளின் வயிற்றெரிச்சலைக் கட்டிக்கொள்ளவேண்டும்?

இனியாவது குறிப்பிட்ட பாதை இலக்க பிரயாணிகள் துயர் தீருமா?

க. கந்தசாமி
காங்கேசன்துறை.

## மெற்றோர் - ஆசிரியர் சங்க சம்மேளனம் தீர்மானம்

[சுழிபுரம்]

''மும்மொழித்திட்டம் பாடசாலைகளில் புகுத்தப்படுவது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

வட்டுக்கோட்டைத்தொகுதி பெற்றோர்-ஆசிரியர் சங்க சம்மேளனக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வட்டுக்கோட்டை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு மும்மொழித் திட்டம் எதிர்க்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உரையாற்றினார். மற்றும் பிரதம கல்வி அதிகாரி எஸ். சிவசுப்பிரமணியம், வட்டாரக் கல்விஅதிகாரி திரு. ப. சண்முகராஜா ஆகியோரும் பேசினர்..

புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: எஸ். அருணாசலம் (அதிபர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி), காரியதரிசி: சு. குமாரசாமி (ஆசிரியர் விக்ரோறியாக் கல்லூரி). தனாதிகாரி; வி. இராமநாதன் [சுழிபுரம்] நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. [இ]

## நீடிப்பு

லண்டன், ஜன 26

லெபனன் ஆட்சிமன்றத்தின் பதவிக்காலம் மேலும் இருவருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

99 உறுப்பினர்களைக் கொண்ட லெபனன் ஆட்சி மன்றத்தின் பதவிக்காலம் நீடிக்கப்படுவது இது இரண்டாவது தடவையாகும்.

பொதுத் தேர்தல் நடத்துவதற்கு உரிய சூழ்நிலை அங்கு நிலவவில்லை என்பதே இந்நடவடிக்கைக்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## முறையீடு

[உடுப்பிட்டி]

கரவெட்டி மேற்குப் பகுதியிலுள்ள சரஸ்வதி வித்தியாலய வீதி மின்சார வெளிச்சமின்றி இருளில் மூழ்கிக் கிடக்கிறது; இதனால் திருடர்கள் இப்பகுதியில் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

இதுசம்பந்தமாக வரியிறுப்பாளர்கள் நெல்லியடிப் பட்டினசபை விசேட ஆணையாளரிடம் முறையிட்டுள்ளனர். [உ]

## 5வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

சில்லாலைவண ஜோசவ்வாஸ் முனிவர் சங்க 5வது ஆண்டு நிறைவுவிழா நாளை சில்லாலை புனித கதிரைமாதா கோவில் முன்றலில் நடைபெறும்.

காலை 6மணிக்கு விசேட கூட்டுப் பூஜைப்பலி நடைபெறும்.

மாலை 6மணிக்கு பங்குக்குரவர் வண. பிரான்சிஸ் குலாஸ் அடிகள் தலைமையில் நடைபெறும் விழாவில் வட்டுக்கோட்டை எம்.பி. திரு. தா. திருநாவுக்கரசு, மன்னார் எம். பி. எஸ். சூசைதாசன் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்கள். (இ)

## இந்திராவின் மன்னிப்பு போலியானது

கிருஷ்ணகாந்த் கண்டனம்

புதுடில்லி, ஜன. 25

அவசரகால நிலையின்போது இடம் பெற்ற வரம்புமீறிய செயல்களுக்காக முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மன்னிப்புக் கோரியுள்வார்.

நெருக்கடி நிலை வரம்பு மீறிய செயல்களுக்கு மற்றவர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாவிடின் தாம் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக திருமதி காந்தி மத்திய பிரதேசத்தில் பேசுகையில் கூறினார்.

திருமதி காந்தி மன்னிப்புக் கோரியுள்ளது வெறும் போலியானது என்று லோகசபை எம். பியும் ஜனதா கட்சியின் தென்மாநில பொறுப்பாளருமான திரு. கிருஷ்ணகாந் தெரிவித்துள்ளார் (இ)

## ரஷ்ய செய்மதி விழுமுன் எரிந்துவிட்டது

விஞ்ஞானிகள் நம்பிக்கை

லண்டன், ஜன. 26

சோவியத் யூனியன் விண்வெளிக்கு அனுப்பிய அணுசக்தி செயற்கைக் கிரகம் ஒன்று கனடாவில் விழுந்துள்ளதாகக் கூறப்பட்டாலும் இக்கிரகம் விழுந்திருப்பதற்கான எதுவிதத் தடயமும் இதுவரை கிடைக்கவில்லை.

இக்கிரகம் விழுந்தபோது காற்றுமண்டலத்துக்குள் வந்த ... எதையும் ... எரிந்துபோயிருக்கலாம் ... இப்போது விஞ்ஞானிகள் ...துகின்றனர். [இ]

# இந்திராகாந்திக்கு டில்லி நீதிமன்றம் 'சமன்ஸ்'

## பெப். 9-ல் ஆஜராகவேண்டும்

புதுடில்லி, ஜன. 26 முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை அடுத்த மாதம் 9-ம் திகதி தம்முன் ஆஜராகுமாறு டில்லி பிரதமமெட்ரோ பொலிட்டன் நீதிமன்ற நீதவான் திரு. பி. கே. ஜெயின்'சமன்ஸ்' அனுப்பியுள்ளார்.

ஷா கமிஷன்முன் ஆஜரான திருமதி காந்தி இரண்டு தடவைகளும் சாட்சியமளிக்க மறுத்ததை அடுத்து ஷா கமிஷன் திருமதி காந்திக்கு எதிராக இரண்டு வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தது.

இவ்வழக்குகள் தொடர்பாகவே திருமதி காந்திக்கு 'சமன்ஸ்' அனுப்பப்பட்டுள்ளது.

திருமதி காந்திமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு 6 மாதச் சிறைத்தண்டனை, ஆயிரம் ரூபா அபராதம் அல்லது இவை இரண்டும் விதிக்கப்படலாம் என்று சட்ட மா அதிபர் தெரிவித்தார். (இ)

## உகண்டாவில் மனித உரிமைகள் மீறப்படவில்லை

### சுதந்திரதின விழாவில் இடிஅமின்

கம்பாலா, ஜன. 27

உகண்டாவில் மனித உரிமைகள் மீறப்படவில்லை என்று உகண்டா அதிபர் ஜெனரல் இடி அமின் தெரிவித்துள்ளார்

உகண்டாவில் மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாக மேற்கு நாடுகள் குற்றம் சாட்டியுள்ளதை ஜெனரல் அமின் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

பிரிட்டன், அமெரிக்க ஆகிய நாடுகள் உட்பட சகல நாடுகளுடனும் சகஜ உறவை வைத்துக் கொள்ளவே உகண்டா விரும்புகிறது என்றும் உகண்டாவின் 8வது சுதந்திர தின விழாவில் பேசிய ஜெனரல் அமின் கூறினர். (இ)

தமிழ்த் திரைப்படங்களில்

# முத்தக் காட்சி:

## எம். ஜி. ஆர். கருத்து

சென்னை, ஜன. 26

தமிழ்த் திரைப்படங்களில் முத்தக் காட்சிகள் ஒருபோதும் அனுமதிக்கப்படக் கூடாது என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் கலாச்சாரத்திற்கும் மரபுக்கும் விரோதமான இக்காட்சிகளை படத் தயாரிப்பாளர்கள் தமது படங்களில் சேர்க்க அனுமதிக்கக் கூடாது என்றும் திரு. இராமச்சந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

குடியரசுத்தினம் தொடர்பாக சென்னையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே திரு. எம். ஜி. இராமசந்திரன் மேற்கண்டவாறு கூறினர்.

### மேனகாகாந்தியின் பாஸ்போர்ட்

புதுடில்லி, ஜன. 26

திருமதி இந்திரா காந்தியின் மருமகளான திருமதி மேனகா காந்தியின் "பாஸ்போர்ட்", டைத் திருப்பி ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சட்டமா அதிபர் தெரிவித்தார்.

ஜனதா அரசு பதவிக்கு வந்ததும் திரு. சஞ்சய்காந்தியினதும் திருமதி மேனகாகாந்தியினதும் 'பாஸ்போர்ட்' டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டது தெரிந்ததே. (இ)

### இடமாற்றம்

[சங்கானை]

வலி-மேற்கு தொல்புரம் விவசாய சேவை நிலையத்திற்கு பெரும்பாக உத்தியோகத்தராக திரு. எஸ். தவராசா முள்ளியவளையிலிருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ளார். (இ)


# எல்லாச் சமயத்திலுமுள்ள எல்லா மனிதருக்கும்

## இரட்சிப்பு! புதுவாழ்வு! குணமடைதல்!



ஸ்ரிவ் கொலொமிஸ்

கனடா தேசத்தைச் சேர்ந்த
ஸ்ரிவ் கொலொமிஸ்,
டொன் ஸ்செல்லன்பேர்க்
போதகர்களைக் கேளுங்கள்



டொன் ஸ்செல்லன்பேர்க்

உலகத்திலுள்ள பெருந்தொகையானோர் இயேசு கிறிஸ்துவின் பேரால் புதுவாழ்வு அடைந்துள்ளனர்.



முடவர் நடக்கின்றனர்

'மருத்துவத்திலும் வைத்தியர்களிலும் எங்களுக்கு நம்பிக்கையுண்டு; ஆனல் உலகத்தில் மிகப்பெரிய வல்லமை கடவுளின் வல்லமையே'



ஆபிரிக்காவில் 30,000 பேர் கேட்கிறுர்கள்

அற்புதத்தை எதிர்பாருங்கள்



குருடர் பார்வை அடைகின்றனர்

இடம்: யாழ்ப்பாணம் பொதுமக்கள் நூல்நிலையத்திற்கு அணித்தான திறந்தவெளி அரங்கு.

திகதி: தை மாசம் 22 முதல் 29 வரை.

நேரம்: தினமும் மாலை 6-00 மணிக்கு.

(இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது)

பிரவேசக் கட்டணம் இல்லை

8321

நாகம்ஸ்
[சுன்னகம்]
தினசரி: 6-45, 10-00
எம். ஜி. ஆர் -ஜெயலலிதா
அரச கட்டளை

புலோலி, சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-30.
சரஸ்வதி சபதம்

RIO
Daily 4 Shows
ROD TAYLOR
in
PARTIZAN
விடுதலை விரும்பிய யூகோஸ்லாவிய மக்கள் நாஸிஜெர்மனிக்கு எதிராக நடத்திய ஜீவமரணப் போராட்டம்.

Regal (Jaffna)
தினசரி 2-30, 6-30 இரவு 9-45 மணிக்கும்
ரவிச்சந்திரன் காஞ்சனா நாகேஷ்
நடித்த
உத்தரவின்றி உள்ளேவா
புத்தம் புதிய கொப்பி (கலர்)

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
பணக்கார குடும்பம்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஃ கமலஹாசன் ஃ ரஜனிகாந்த்
ஃ எம்.எஸ். விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா.
மூன்று முடிச்சு
திரை: கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர், வாணிஸ்ரீ, நாகேஷ்
நடித்த
"அவசரக் கல்யாணம்"
(புதிய பிரதி)
இத்துடன் அமரர் தந்தை செல்வாவின் இறுதி யாத்திரைக் காட்சியும் காண்பிக்கப்படும்.
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு!

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

ராணி
வி. பீ. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் —ஜெனிட்டா
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செலவநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது 2வது ஜனத்திரள் வாரம்!
சாந்தி
(யாழ். நகர்) போன்: 7642:
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம்.ஜி.ஆரின் அரசிளங்குமரி (புத்தம் புதியபிரதி)

... சிறுவர்களுக்கான படக் காட்சி ...
பிரதி சனியும் ஞாயிறும் காலை 8-30 மணிக்கு மட்டும் காண்பிக்கப்படும்.
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்
28-1-78 சனியும் 29-1-78 ஞாயிறும்
காலை 8-30 மணிக்கு
ROBINSON CRUSOE
[சினிமாஸ்கோப்—ஆங்கிலம்]
[பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்]

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
மூத்தான முத்தல்லவோ

100-வது வெற்றித் தினம்
வின்ஸோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

## "அன்பின் அடிப்படையில் ஜாதி, மத, மொழி பேதமற்ற சமுதாயம் உருவாக உழைப்பீர்"

### இராணுவ வீரர்க்கு கேர்ணல் பெர்ணண்டோ அறிவுரை

(யாழ்ப்பாணம்)

"நேர்மையான, அன்பு மார்க்கம் உள்ள சமுதாயம் ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கு இராணுவத்தினரது தாய பணி இன்றியமையாதது" என்று வடபகுதி இராணுவ கொமாண்டர் கேர்ணல் ஜி. டி. பெர்ணண்டோ கூறினார்.

வடபகுதி இராணுவ பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்றுக்கொண்டதன்பின் முதல் தடவையாக கேர்ணல் பெர்ணண்டோ தமது அதிகார எல்லைக்குட்பட்ட மன்னார், வவனியா, முல்லைத்தீவு, வல்வெட்டித்துறை, மாதகல், இராணுவ முகாம்களைச் சேர்ந்த அதிகாரிகள், இராணுவ வீரர்கள் அனைவரையும் உள்ளடக்கிய மாநாடு ஒன்றினை பலாலி முகாமில் நடத்தி அதில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

கேர்ணல் பெர்ணண்டோ தமது உரையில் மேலும் கூறியதாவது:

"நல்லதொரு சமுதாயம் உருவாக இராணுவத்தினர் முன்மாதிரியாகத் திகழவேண்டும். ஜாதி, மத, மொழி பேதங்களற்ற சகோதரத்துவ உணர்வு வலுப்பெற்ற சமுதாயமே அவசியமானது.

நாம் பிறந்த இந்நாட்டில் நாம் அனைவரும் சமமானபிரஜைகளாக அன்பின் அடிப்படையில் சமாதானத்தையும், சௌஜன்ய உறவையும் பாதுகாக்கவேண்டும்.

இராணுவத்திற்கே உரித்தான அன்பு, வீரம், பண்பு என்பனவற்றை உறுதிப்படுத்தி சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக நீதிவழி ஒழுகுவோம். (உ)

## 1000 சுருட்டுகளுக்கு ரூ. 27-50 சதம்

## கூலி கொடுக்காத தொழிற்சாலையில் தொழிலாளர் வேலைக்கு செல்லக்கூடாது

### இ. சு. தொ. சங்க பொதுச்சபை தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

1,000 சுருட்டுக்களுக்கு ரூபா 27-50 சதம் வழங்குவதற்காக 1975ம் ஆண்டு முதல் சுருட்டு முதலாளிமார் சம்மதம் கொடுத்து அறிவித்தார்கள். ஆனுல் 18 ரூபாய் முதல் பல விதமாகக் கூலிகொடுத்துவருகிறார்கள். இதற்குக் காரணம் தொழிலாளர் மத்தியிலுள்ள ஒற்றுமையின்மையாகும்."

தாவடி தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கப் பொதுச்சபைக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. பொ. வ. க. முதலியார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"சுருட்டுத் தொழிலாளர்கள் ரூபாய் 27-50 சதம் பெற்ற பின்னர்தான் மேலும் கூலி உயர்வைப் பற்றி எமது சங்கம் தீர்மானிக்கும். எமது சங்கம் 27-50 கூலியைப் பல கணக்குத் தீர்வைகளில் வேண்டித் தந்தது. ஆனுல் முதலாளிமார்களுடன் ஒப்பந்தம் செய்து, குறைந்த கூலிக்குத் தொழிற்செய்வது தொழிலாளர் வர்க்கத்துக்கே இழுக்காகும். முதலாளிமார்கள் ஒவ்வொரு கூலி உயர்வுக்கும் 20 ரூபாயைச் சுருட்டின் விலையில் கூட்டியுள்ளனர். தற்பொழுதும் புகையிலை விலையேற்றம் என்று சுருட்டின் விலையை இன்னும் 20 ரூபாய் கூட்டியுள்ளனர். இன்று சுருட்டுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. இரவுபகலாகத் தொழிற்சாலையில் தொழில் நடக்கிறது. ஆகவே ரூபா 27-50 சதம் கொடுக்காத தொழிற்சாலைகள் எல்லாவற்றிலும் தொழிலாளர் ஒற்றுமையாக வேலைநிறுத்தம் செய்தால் முதலாளிமார்கள் அடுத்த கணக்குத் தீர்வையை சரியாக ரூபா 27-50 சதம் கொடுப்பார்கள்.

இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேறியது.

சுருட்டுத் தொழிலாளர்களுக்கு ரூபா 27-50 சதமாகக் கணக்குத் தீர்க்காத தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் நின்று, முதலாளிமார் 15 நாட்களுக்கு ஒவ்வொரு முறையும் சம்மதம் தெரிவித்த பின் வேலைக்குச் செல்லவேண்டும்.

## "பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை தமிழர் விடுதலைக்கூட்டணி பின்பற்றியிருக்கலாமே"

### குமார் பொன்னம்பலம் கேள்வி

[உடுப்பிட்டி]

தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்குத் தமிழ் மக்களின் அமோக ஆதரவு கிடைத்தது தனிநாட்டுக்காக அல்ல. தமிழ் இனத்தின் ஐக்கியத்தை நிருபிக்கவே அமரர் ஜி. ஜி. தமிழ் சிங்கள மக்களின் ஐக்கியத்தையே விரும்பினார். தனிநாட்டை அல்ல".

இவ்வாறு கரவெட்டி சாமியன் அரசடியில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் புனரமைப்புக் கருத்தரங்கில் பேசிய தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"தேர்தல் காலத்தில் கூட்டணியினர் தனிநாடு கோஷமிட்டனர். சிங்கள மக்களோடு பேச்சுவார்த்தையினால் பயன் இல்லை, போராட்டம் தான் ஒரே வழி என்றனர். ஆனுல் இன்றோ அவர்கள் நடத்தை நூற்றுக்கு நூறு மாறாக இருக்கின்றது. இலுப்பை மரத்தைநாடி வௌவால் வருவது போல் தமது போராட்டத்திலும் வெளிநாடு வரும் என்றார்கள் இப்போது அவர்களது 'வௌவால்' கோஷம் எங்கே? என்னவாயிற்று?

#### பலஸ்தீன விடுதலை இயக்கம்

'தனிநாடு காணவேண்டும் என்று விரும்பினால், போராட்டத்துக்கு ஆயத்தமானுல் எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்து இருக்கலாம். அல்லது தங்களுக்குள் ஒரு அரசியல் சாஸனத்தை உருவாக்கியிருக்கலாம். பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் பலஸ்தீனியர்களுக்காக பாராளுமன்றம் செல்லாமலே அரசியல் சாஸனம் தயாரித்துப் பிரகடனப்படுத்தினார் இதைப் போன்று தனிநாடு கோரும் கூட்டணியினரும் செய்திருக்கலாமே?

1972-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் சாஸனத்திற்கு அடங்கிச் சத்தியப் பிரமாணம் எடுத்துப் பின் தமிழ் மக்கள் அரசியல் சாஸனத்தை ஏற்கவில்லை என்று நிரூபிக்க காங்கேசன்துறை இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி ஈட்டிச் சென்று பின்னரும் அதே அரசியல் சாஸனத்தின் கீழ் ஒழுகி சத்தியப் பிரமாணம் எடுத்தார்கள். இப்படிப்பட்டவர்கள் எப்படித் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியும்?

'பொத்துவில் கனகரத்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து வெளியேறிய போது கனகரத்தினம் கனவானுக இருந்தால் மீண்டும் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று கேட்டார்கள். ஆனுல் இன்றைய நிலையில் கூட்டணியினர் கனவான்களாக இருந்தால் எம். பி. பதவியைத் துறந்து தேர்தலில் குதிப்பார்களா?' என்றார்.

பருத்தித்துறை இலங்கை வங்கியின் முன்னுள் முகாமையாளர் திரு. வீ. எஸ். கந்தப்பு பேசும் போது 'முன்னைய அரசாங்க அமைச்சரான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா கூட ஜி. ஜி. யால் உருவாக்கப்பட்ட மூன்று தொழிற்சாலைகள் தான் இன்று நாட்டிற்கு உதவுகின்றன என்று சுட்டிக் காட்டினார்' என்று கூறினார்.

இக்கூட்டத்தில் கட்சிப் பிரமுகர்களும், பெருந்திரளான வாலிபர்களும் சமூகம் அளித்து இருந்தனர். [உ]

## நீரிறைக்கும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாமே இக்களவை செய்ததாகவும் நீர் இறைக்கும் இயந்திரத்தை சின்னத்துரை தர்மலிங்கத்திடம் பாதுகாத்து வைக்குமாறு கொடுத்ததாகவும் தெரிவித்ததையடுத்து சின்னத்துரை தர்மலிங்கம் விடுதலை செய்யப்பட்டார். சங்கானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. இராசையா கான்ஸ்டபிள் எல். ஏ. குணரத்தின ஆகியோர் இந்த இருவரையும் கைது செய்து ஆஜர் செய்தனர். [இ]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
சுஜாதா-முத்துராமன்
வாழ்ந்து காட்டுகிறேன்

சன்சயின்
அரைபார்சோப்
இன்றே
கேட்டு வாங்குங்கள்
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி.

"தமிழரின் அகதிக் கோலம்:

# பிரதேச இறைமையின் அவசியத்தைஉணர்த்துகிறது

## — வண பிதா ஜேம்ஸ் பத்திநாதர்

[வவனியா]

"வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த மற்றைய பிரதேசங்களிலும், தமிழ் மக்கள் வாழ்ந்தார்கள். வாழ்ந்த இடங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் தலைவர்களாகவும் முதன்மையுடன் வாழ்ந்தார்கள். அண்மைக்கால இனக்கலவரத்தின் பின் இவர்களை அகதிகள் முகாம்களில் தான் காணக்கூடியதாக இருந்தது'' என்று பாவற்குளத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி கிளைத் திறப்பு விழாவில் பேசிய வண பிதா ஜேம்ஸ் பத்திநாதர் குறிப்பிட்டார்.

திரு. தா. விக்கிரமசிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் வண பிதா ஜேம்ஸ் பத்திநாதர் தொடர்ந்து பேசுகையில், "நம்மவர்களை அகதிகளாகக் கண்ட காட்சி எமக்கென தன்னிறைமை கொண்ட பிரதேசத்தின் அவசியத்தை அப்பட்டமாக எடுத்துக் காட்டுகிறது. இதை உணர்ந்தால் வடபிரதேசத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நெருங்கி வாழ்பவர்கள் வளமும் நிலமும் உள்ள வவனியா எல்லைப் பிரதேசத்தை மிக விரைவில் தமது தாயகமாக ஆக்கவேண்டும் என்ற உண்மை மிகத் தெளிவாகிறது. அதுமட்டுமல்லாமல் எல்லைப்பிரதேசங்கள் எல்லாம் தமிழர்கள் நெருங்கி வாழவேண்டும் என்றார்.

சட்டத்தரணி எம். சிற்றம்பலம் பேசுகையில், "எமது இயக்கத்தை வளர்க்கும் முகமாக நாம் கிளைகளை நிறுவி வரும்போது ஆகஸ்ட் மாத வன்செயல்கள் வந்ததால் தடைப்பட்டுவிட்டது. இனி தொடர்ந்து இக்கிளைகளை நிறுவுவதன் மூலம் எமது இயக்கத்தை வளர்த்து இலட்சியத்தை அடைய முடியும்'' என்று குறிப்பிட்டார் [உ]

## எடை குறைவு?

[உடுப்பிட்டி]

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சில கிளைகளில் பாவனையாளருக்கு வழங்கப்படும் பங்கீட்டுச் சீனி முதலிய பொருட்கள் நிறை குறைவாகக் காணப்படுவதாகப் புகார் செய்யப்படுகிறது.

அநேகமான கடைகளில் அரை அவுன்ஸ் படிகளின்றி இருப்பதால் பொருட்கள் நிறுக்கப்படும்போது ஒழுங்கீனம் நிலவுகிறதாம். இதனால் அதிருப்தி அடைந்த பாவனையாளர்கள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் புகார் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது [உ]

அச்சுவேலி ப. நோ. கூ. ச. கொள்ளை:

# சந்தேகநபரை நால்வர் அடையாளம் காட்டினர்!

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கொள்ளை தொடர்பாக நேற்று நடந்த அடையாள அணிவகுப்பில் சந்தேக நபரான வேலும் மயிலும் சௌந்தரராஜன் அடையாளம் காட்டப்பட்டார்.

யாழ். பதில் நீதவான் திரு. எஸ். கனகரத்தினம் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணிவகுப்பிற்கு 19 சாட்சிகள் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் பொலிஸ், இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் நால்வரை அடையாளம்காட்டினர்.

சந்தேக நபர் பெப்ரவரி 8-ந் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டார். [க]

# "இனவெறிக்குப் பயந்து ஓடக்கூடாது"

## செங்கொடிச் சங்கத்தலைவர்

(ஹட்டன்)

"கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்றஇனக்கலவரத்தை சிங்கள மக்களின் பெரும்பான்மையினோர் ஆதரிக்கவில்லை. சிங்கள மக்களில் சிறு நாசகார சக்தியே வகுப்புக் கலவரத்திற்குக் காரணம். சிங்கள தமிழ் மக்களிடையே வகுப்புக்கலவரத்தை தூண்டி, மக்களை பிளவுபடுத்துவதன் மூலம் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்த பிற்போக்குச் சக்திகள் முயல்கின்றன. எதிர்காலத்திலும் பிற்போக்குச் சக்திகள் இனக்கலவரங்களை ஏற்படுத்த எத்தனிக்கலாம்.

ஆனால் இனவெறியை எதிர்த்து போராடுவதா அல்லது பயந்து நாட்டைவிட்டு ஓடுவதா என்பது முக்கியமான கேள்வி. இனவெறியை எதிர்த்துப்போராடுவதன் மூலமே இனவெறியை அடக்க முடியுமே தவிர பயந்து நாட்டைவிட்டு ஓடுவது அதற்கு பரிகாரமல்ல. சிங்கள தமிழ் தொழிலாள வர்க்கம் ஐக்கியப்பட்டு வகுப்புவாதத்திற்கு எதிராக போராடவேண்டும்"

இவ்வாறு அட்டன் நகரசபை மைதானத்தில் நடைபெற்ற தொழிற்சங்கஐக்கியக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றியபோது செங்கொடிச் சங்கத்தின் தலைவரும்இலங்கை முற்போக்கு தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவருமான சட்டத்தரணி கே. எச். எல். கரவிட்ட குறிப்பிட்டார்.

மஸ்கெலியா தொகுதி முன்னாள் எம். பி. திரு. பி ஜி ஆரியதிலகா கூட்டத்திற்கு தலைமைவகித்தார்.

திரு கரவிட்ட மேலும் கூறியதாவது:

"வியட்நாம் நாட்டில் வியட்நாம் மக்களில் ஒருபகுதியினரைப் பாவித்து அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாம் மக்களையே கொன்று குவித்தது. அதேபோல எமது நாட்டில் பிற்போக்குச் சக்திகள் கலவரத்தைத் தூண்டி சிறுபான்மை மக்களைத் தாக்குவதன் மூலம் மக்களைப் பிளவுபடுத்த எத்தனிக்கின்றன, ஆகவே வகுப்புவாதத்தை எதிர்த்து தொழிலாளவர்க்கம் போராடவேண்டும். ஏனென்றால் மக்கள் ஐக்கியப்படும்போது அவர்களைப் பிளவுபடுத்த பிற்போக்கு சக்திகளும் மக்களின் எதிரிகளும் சாதி, மத இனபேதங்களை வளர்ப்பார்கள் என்பது சரித்திரம்போதிக்கும்உண்மை. உலகத்தின் பல நாடுகளிலும் சிறுபான்மை மக்கள் வாழ்கின்றார்கள். ஆனால் அவர்கள் இனவெறியர்களை எதிர்த்து போராடுகிறார்களே தவிர பயந்துஓடவில்லை''

"அரிசிவெட்டு தோட்டத் தொழிலாளரை பெரிதும் பாதிக்கும். 25 வீத. சம்பள உயர்வுகொடுத்தாலும் தொழிலாளரால் சமாளிக்கமுடியாது 100க்கு 100 வீதம் நாணய மதிப்பைக் குறைத்ததன்மூலமாக சமான்களின் விலை 2, 3 மடங்காக உயர்ந்துவிடும். மாவின் விலையையும் அதிகரிக்க முயற்சிக்கிறார்கள். இதிலிருந்து யு.என். பி. கட்சியினர் தேர்தலுக்கு முன் செய்த பிரசாரத்திற்கும் தற்போது நடைமுறைப்படுத்தும் கொள்கைக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை மக்கள் உணர ஆரம்பித்துவிட்டனர். (உ)

# வேலை இழந்த வித்துவான் பண்டிதருக்குமீண்டும்வேலை

## இராசலிங்கம் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

கடந்த ஆட்சிக் காலத்தில் ஆசிரிய நியமனம் பெற்று பின்னர் வயதெல்லை காரணமாக பதவியிலிருந்து நீக்கப்பட்ட பண்டிதர், வித்துவான் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை வழங்க கல்வி அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

கூட்டணி எம். பிக்கள் அண்மையில் கல்வி அமைச்சர் திரு: நிஸங்கா விஜயரத்தினவைச் சந்தித்தபோதே அமைச்சர் இதற்கு இணக்கம் தெரிவித்தார்.

அத்துடன் இந்த ஆசிரியர்களின் சகல விபரங்களையும் சேகரித்துத் தமக்குத் தருமாறு கல்வி அமைச்சர் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கத்தைக் கேட்டுள்ளார்.

இவ்வாறு வேலையிழந்த வித்துவான்களும் பண்டிதர்களும் உடனடியாக சகல விபரங்களுடனும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியில் கல்விப் பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள உடுப்பிட்டி எம் பி திரு. த. இராசலிங்கம் கேட்டுள்ளார் [இ]

## ஜே. ஆர்.—

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஞானம் ஆகியோர் பற்குபற்றுவார்கள். யாழ். மாவட்டத்திலுள்ள சகல சைவாலயங்களிலும் விசேட பூசையை இக்குழுவினர் ஒழுங்குசெய்துள்ளனர்.

கிறிஸ்தவ ஆலயங்களில் அன்று காலை விசேட ஆராதனையும், பௌத்த விகாரைகளில் பிரித் ஓதும் வைபவமும் முஸ்லிம் பள்ளிவாசல்களில் தொழுகை ஆசியும் நடைபெறும்.

இத்தினத்தில் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கவும் இக்குழுவினர் ஏற்பாடுசெய்துள்ளனர்.

உதவி அரசாங்க அதிபர்கள் தொகுதிரீதியாக ஒழுங்கு செய்த வைபவங்களிலும், யாழ். மாநகரசபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட வைபவங்களிலும் இக்குழுவினர் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

கண்டியில் நடைபெறும் வைபவத்திலும் இக்குழுப் பிரதிநிதிகள்கலந்துகொள்வதென முடிவுசெய்யப்பட்டது.

இத்தினத்தில் பாடசாலைகளில் சிரமதான பணிகளை அதிபர்கள் மூலம் மேற்கொள்ளுமாறு வடபிராந்திய கல்வி அதிபர் திரு. ரி. மாணிக்கவாசகரைக் கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அநாதை இல்லம், வைத்தியசாலை, நோயாளிகளுக்கு மதிய உணவும் சிற்றுண்டியும் வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. [க-இ]

## புகார்

(யாழ்ப்பாணம்)

நெடுந்திவு மகாவித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்ட திரு. ஜே அந்தோனிப்பிள்ளையின் இடமாற்றம் பின்போடப்பட்டது பற்றி அகில இலங்கை முன்னேற்றத் தமிழர் அபிவிருத்திச் சங்கம் கல்வியமைச்சருக்குப் புகார் செய்துள்ளது;

நெடுந்தீவு மத்திய றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை அதிபர் திரு. ஜே. அந்தோனிப்பிள்ளை, நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டிருந்தாரென்றும், இவரது இடமாற்றம் அரசியல் தலையீடு காரணமாகக் காலவரையின்றிப் பின்போடப்பட்டுள்ளதாகஅப்புகாரில் தெரிவிக்கப்பட்டது.

கல்வியமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்னவுடன் தொடர்பு கொண்ட அகில இலங்கை முன்னேற்றத் தமிழர் அபிவிருத்தி இயக்கத் தலைவர் திரு. எஸ். எஸ். சுந்தரம் இது பற்றி விசாரணைசெய்து நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார். (க)

# கிராம அபிவிருத்தி, மாதர் சங்கங்கள் அமைப்பு

(மட்டுவில்)

கிராமரீதியாக கிராம அபிவிருத்திச் சங்கங்களையும், மாதர் சங்கங்களையும் அமைப்பதற்கான ஏற்பாடுகளை தென்மராட்சிப்பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜே. தேவசகாயம் மேற்கொண்டுள்ளார்.

உள்நாட்டு அமைச்சின் உத்தரவின் பேரிலே இந்த அமைப்பு வேலைகள் செய்யப்படுவதாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. தேவசகாயம் தெரிவித்தார்.

1973 ம் ஆண்டில் மேற்படி சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன. புனரமைப்பின்போது புனரமைப்புச் செய்யப்படாத சங்கங்களை இவ்வாண்டு புனரமைப்புச் செய்து பதிவுசெய்துகொள்ள முடியுமென்றும் அவர் சொன்னார். [உ]


## தேவை

வாகை, மஞ்சவுன்னா, நாவல் மரங்கள் எமது தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்றன. இவற்றை வைத்திருப்போர் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

வர்த்தக முகாமையாளர்
சி-நோர்,
8329 குருநகர்.





## மீன் வியாபாரி கொலை

(கரவனல்ல)

கரவனல்ல பொலிஸ் பகுதியைச் சேர்ந்த விஜயவர்தன [42வயது] என்னும் மீன்வியாபாரி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக பிரேமரத்ன, ஜெயந்த, மகிந்த என்னும் மூவர் தேடப்படுகின்றனர். (உ)


## தவறிவிட்டது

சென்ற 20-ந் திகதி பிற்பகல் பருத்தித்துறை கடுகதி பஸ்ஸில் எனது பாஸ்போட் மற்றும் முக்கியமான கடிதங்கள், டயறி ஆகியன அடங்கிய கறுத்த கிட்பாக் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். த. பி. மனுவேல், சன்னதி சந்தி, தொண்டமனாறு, அல்லது மின்சார முகாமி, சங்கானை பட்டினசபை, சங்கானை. தகுந்த சன்மானம் வழங்கப்படும். 8337


## மக்கள் பிடித்து கொடுத்தவர்கள்

[யாழ்ப்பாணம்]

மாங்குளத்தில் பஸ்ஸை கொள்ளையடித்த சமயம் பொதுமக்களால் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட சந்தேக நபர்களான ராஜ்மோகன், மகேஸ்வரன் ஆகியோரர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். [க]

## மந்திரிகளின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

அரசமைப்பு திருத்தங்களின் படி ஜனாதிபதி புதிய பிரதம மந்திரி ஒருவரை நியமிப்பார். இவர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் பெரும்பாலானவர்களின் ஆதரவைப் பெற்றிருக்கவேண்டும்.

புதிய ஜனாதிபதி பதவி ஏற்று பிரதம மந்திரி ஒருவர் நியமிக்கப்பட்டதின் பின்னர் அவர் புதிய அமைச்சர் அவையொன்றை உருவாக்குவார். அச்சமயத்தில் ஒருவேளை இப்போது பதவியில் இருக்கும் அமைச்சர்கள் சிலர் மாறலாம். புதியவர்களும் இடம்பெறக்கூடும்.

மாவட்ட அமைச்சர்கள் பதவியும் படிப்படியாகவே உருவாக்கப்படும் என்று தெரிகிறது. [ம]

## இறப்பிலும்—

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

வாறன்'' என்று வேடிக்கையாக தமது நண்பரிடம் கூறினாராம். பின்னர் வீட்டிற்குப் புறப்பட்ட அவர் திரும்பவும் "அப்படி ஒன்றுக்கும் யோசியாதை விடிய சந்திப்போம் என்று விடைபெற்றுக்கொண்டாராம்.

பின்னர் சிலமணி நேரங்களில் திடீரென நோய்வாய்ப்பட்ட இரத்தினதுரை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். இவரது சடலம் வீட்டுக்குக்கொண்டு வந்ததும் எதிர்வீட்டில் கவலையுற்றிருந்த இவரது நண்பரின் உயிரும் பிரிந்துவிட்டதாம்.

பாலியசிநேகிதர்களான இவர்கள் இறப்பிலும் இணைபிரியாது இணைந்து கொண்டது அப் பகுதியில் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. [கா]

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு தையி மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.